1947-க்கு முன்

பள்ளி மாணவர்கள் 1908-ல் வந்தேமாதரம் கோஷமிட்டதற்கே பள்ளி மூடப்பட்டது

பிரிட்டிஷ் ஆட்சியின்போதே தேசபக்திக்காக இயக்கம் நடத்தும் சவாலை டாக்டர்ஜி தனியாகவே ஏற்றக்கொண்டார்

மத்திய மாகாண அரசாங்கம் 1932-ல் அரசு ஊழியர்கள் சங்கத்தில் சேரக்கூடாது என்று சுற்றறிக்கை - சட்ட மன்றத்தில் 1934 மார்ச் 7 அன்று டாக்டர்ஜியின் ஆசிரியரான பண்டாராவைச் சேர்ந்த பாபாசாஹேப் கோல்தே வெட்டுத் தீர்மானம் கொணர்தல் - மார்ச் 7,8,9 சட்ட சபையில் கடுமையான விவாதங்கள் - டாக்டர்ஜி பார்வையாளர் அரங்கில் - அரசாங்கம் கவிழ்தல் - ஆனாலும் சுற்றறிக்கை வாபஸ் வாங்கப்படவில்லை.

சங்கத்திற்கு வந்த ஆபத்துக்களை டாக்டர்ஜி தானே கவனித்துக் கொண்டார்

1948 தடை

ஜனவரி 30 காந்தி கொலை

பிப்ரவரி 1 குருஜி வீடு தாக்கப்படல் - நள்ளிரவிற்குப் பின் குருஜி கைது - Be Calm at all costs

பிப்ரவரி 4 சங்கம் தடை

சங்கத்தின் மீதான குற்றச்சாட்டை மறுத்து படேல், நேருவிற்கு எழுதிய கடிதத்தில்

நேரு சங்கத்தை அழிப்பதில் தீவிரம்

6 மாதத்திற்குப் பின் குருஜி விடுதலை - நாகபுரியை விட்டு வெளியே செல்லக்கூடாது என்று தடை

1948 ஆகஸ்ட் 11 அன்று படேல் மற்றும் நேருவிற்குக் குருஜி கடிதம் எழுதுதல் - பதில் இல்லை - மீண்டும் கடிதங்கள்

செப்டம்பர் 27 அரசாங்கத்திடமிருந்து பதில், "ஆர்எஸ்எஸ் தேச விரோதம், மத வாதம்...."

பயண வரம்புகளை நீக்கக் கோரி குருஜி கடிதம் - அக்டோபர் 13 வரம்புகள் நீக்கம்

அக்டோபர் 17, 23 டில்லி வந்து படேலை சந்தித்தல் - பேச்சில் முன்னேற்றமில்லை

அக்டோபர் 30 டில்லியை விட்டு வெளியேற நிர்ப்பந்தம்

1948 ஜனவரி 29ல் அம்ருதசரசில் சங்கத்தைத் தகர்த்தெரியப் போவதாய் பேசியிருந்தார் - காந்தி கொலை ஒரு சந்தர்ப்பமே

1948 பிப்ரவரி கடைசியில், "பகவா கொடி பறக்க ஒரு இஞ்ச் நிலம் கூட தரமாட்டேன். உள்நாட்டு, வெளிநாட்டு செல்வாக்கைப் பயன்படுத்தி நசுக்குவேன்"

தொடர்ந்து கடிதங்கள் - நேரு பதில் - குருஜியின் கர்ஜனை கடிதம்

இறுதியாக நவம்பர் 13 கடிதம், "அரசிற்கு இரண்டே வழிகள்தான். ஒன்று குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் நிரூபித்தல் அல்லது இரண்டாவது சங்கத்தின் மீதான தடையை நீக்குதல்

நவம்பர் 14 நள்ளிரவு ஒரு மணிக்கு உள்துறை அறிக்கை - குற்றச்சாட்டுகள் உறுதி - குருஜி நாகபுரி செல்லாவிட்டால் நடவடிக்கை - அடுத்த 2 மணி நேரத்தில் கைது

இதை எதிர்பார்த்து 13-ம் தேதியே இது வரை நடந்த கடிதப் போக்குவரத்துகள் பற்றி குருஜி அறிக்கை

டிசம்பர் 9 "மீண்டும் ஷாகா பணிகளைத் துவக்கலாம்" - ரகசிய செய்தி மூலம்

80,000 பேர் கைது - 1942 ஆகஸ்டு புரட்சியில் 60,000 பேர் மட்டுமே கைது - குருஜியும் கைது

முன்னாள் அடவகேட் ஜெனரல் டிஆர் வெங்கட்ராம சாஸ்திரி நாளேடுகளுக்குக் கடிதம்

கேசரி இதழ் ஆசிரியர் ஜிவி கேட்கர் பேச்சுவார்த்தை

1949 ஜனவரி 22 ஷாகாக்கள் நிறுத்தம்

சிறையில் அரசு செலவில் முகாம்கள்!

டிஆர் வெங்கட்ராம சாஸ்திரி, படேலை சந்தித்தல்

'ஆர்எஸ்எஸ்-க்கு எழுத்து பூர்வமான அமைப்பு விதிமுறை இல்லை'

டிஆர்வி கார்யகர்த்தர்களை சந்தித்து விதிமுறைகளைத் தயாரித்து அனுப்புதல் - குருஜிதான் அனுப்பவேண்டும் என அரசு பிடிவாதம் - குருஜி சிறையிலிருந்து 1949 ஏப்ரல் 11 அன்று அனுப்புதல்

குருஜிக்கு மரியாதை தெரியவில்லை என அரசு! - தடையை நீக்க முடியாது

டிஆர்வி தான் மேற்கொண்ட முயற்சிகளை எல்லாம் பத்திரிகைக்கு அறிக்கை அனுப்பி, 1949 ஜூலை 13 வரை வெளியிட வேண்டாம் எனக் கூறுதல்

ஆனால் ஜூலை 11 அரசு திடீரென்று தடையை நீக்கியது - ஜூலை 12 இரவு வானொலியில் அறிவிப்பு - ஜூலை 13 குருஜி உட்பட அனைவரும் விடுதலை - எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை.

சங்கம் தனித்து நின்று போராடியது - குருஜியின் நெஞ்சுரம் வென்றது

1975 தடை

1975 ஜூன் 25 முதல் 1977 மார்ச் 21 வரை நெருக்கடி நிலை - அனைத்து ஜனநாயக உரிமைகளும் பறிப்பு

1971 தேர்தல் இந்திரா காங்கிரஸ் வெற்றி 352/518

1971 தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக, இந்திராவை எதிர்த்து தோற்றுப்போன ராஜ்நாராயண் வழக்கு - அலாகாபாத் கோர்ட் தேர்தல் செல்லாது என 1975 ஜூன் 12 தீர்ப்பு - ஆறு வருடங்கள் தேர்தலில் நிற்கவும் முடியாது - எமர்ஜன்ஸி அறிவிப்பு

1975 ஜூன் 25 நள்ளிரவில் டில்லி காரியாலயத்திற்கு ரகசிய தொலைபேசி அழைப்பு

சங்கம் உள்ளிட்ட பல அமைப்புகள் தடை

சங்கம் மற்றும் பல அமைப்புகளுடனும், ஜெயபிரகாஷ் நாராயணன் போன்ற நல்லவர்களுடன் இணைந்து போராடியது

1977 ஜனவரியில் தேர்தல் அறிவிக்கப்பட்டது - இந்திரா வென்றுவிடுவோம் என்ற நம்பிக்கையில்

ஜனதா கட்சி வென்றது - மொரார்ஜி தேசாய் பிரதமரானார்

1992 தடை

1992 டிசம்பர் 6 சர்ச்சைக்குறிய கட்டடிம் தகர்ப்பு

டிசம்பர் 10 சங்கம், விஹிப தடை

ஆறுமாதம் கழித்து ட்ரைப்யூனல் தடை செல்லாது என அறிவிப்பு

ஆர்எஸ்எஸ்-க்கு தடையா? ஹா ஹா ஹா!

பொதுமக்கள் மற்றும் சமுதாயம் முழுவதும் சங்கத்திற்குத் துணை நின்றது.